சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள். 11.12.2024
SC.NO.197/2022
PW10 (Lw10) : முகமது ரசீத் (வயது 38 ) த/பெ.அப்துல் ரசூல்
(எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர் )
(சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது இலால்குடி அரசு மருத்துவமனையில் உதவி அறுவை சிகிச்சை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். இலால்குடி வட்டம், திருமங்கலம் கிராமம், மாரியம்மன் கோவில் தெருவை சேர்ந்த ராமசந்திரன் மகன் ஜெகன் என்பவர் 25.04.2022 ஆம தேதி இரவு 10.15 மணிக்கு அவரது தகப்பனார் ராமசந்திரனுடன் வந்து தன்னை தெரிந்த நபர் ஒருவர் அருவாளால் வெட்டியதாக கூறினார். நான் அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து திருச்சி, அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக பரிந்துரை செய்தேன். அவருக்கு 4 x 3 x 2 cm அளவுள்ள இடது கையில் வெட்டு காயம். 1 x 1 x1 cm அளவுள்ள இடது கையில் வெட்டு காயம் இருந்தது. அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன். நான் பதிவு செய்த விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று **அ.த.சா.ஆ.8**. அதே விலாசத்தை சேர்ந்த முத்தையன் மகன் ராமசந்திரன் தன்னை தெரிந்த நபர் அருவாளால் வெட்டியதாக கூறி 25.04.2022 ஆம தேதி இரவு 10.15 மணிக்கு தனது மகன் ஜெகனுடன் சிகிச்சைக்கு வந்தவரை பரிசோதித்து அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து மேல் சிகிச்சைக்காக திருச்சி தலைமை அரசு மருத்துவமனைக்கு அனுப்ப பரிந்துரை செய்தேன். அவருக்கு இடது பக்க தலையில் 9 x 2x 2 cm அளவுள்ள வெட்டு காயம் இருந்தது. இடது ஆள்காட்டி விரலில் 3x 2 x 1 அளவில் வெட்டு காயம் இருந்தது. தலையின் நடுவில் 5 செ.மீ அளவில் மண்டை எலும்பு வெளியில் வந்திருந்தது. அவருக்கு சிகிச்சை அளித்ததில் அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்று வழங்கினேன். நான் பதிவு செய்த விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று **அ.த.சா.ஆ.9**. மேற்படி காயச்சான்றிதழ்களை திருச்சி தலைமை அரசு மருத்துவமனையில் காயம்பட்டவர்களுக்கு சிகிச்சை வழங்கிய மருத்துவர் வழங்கிய மருத்துவ சான்றிதழ் படி அதனை பார்த்து நான் வழங்கினேன். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>கு.வி</u>** - குறுக்கு விசாரணைக்கு எதிரிகள் தரப்பில் தயாராக இல்லாததால், சாட்சியின் நலன் கருதி, நீதியின் நலன் கருதி குறுக்கு விசாரணை இல்லை என முடிக்கப்படுகிறது.

/ signed/
முகமது ரசீத்

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார

R MOHANA

Digitally signed by R MOHANA
Date: 2024.12.11 18:43:06 +0530

சார்பு நீதிபதி
இலால்குடி